# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

பெரம்பலூர் - அரியலூர் மாவட்டக்குழு

அன்னை லட்சுமி நினைவகம்,

"3" ரோடு, துறைமங்கலம் - பெரம்பலூர் - 621220.

CPI (M)


நாள்.............................

17.11.2022

பெரம்பலூர்

அனுப்புநர்

பெ.ரமேஷ்

மாவட்ட செயலாளர்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி( மார்க்சிஸ்ட்)

பெரம்பலூர்.

பெறுநர்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,

தமிழ்நாடு அரசு

சென்னை–9.

வழி

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியத்தலைவர் மூலமாக

<u>பொருள்:</u>

1. பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், நூத்தப்பூர் கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் ராஜேஸ்வரி மரணம் குறித்து நீதிவிசாரணைக்கு உத்திரவிடக்கோருதல்

2. போக்ஷோ , கடத்தல், பாலியல் வன் கொடுமை, கொலை மிரட்டல், தற்கொலைக்கு தூண்டுதல், ஆபாச போட்டோ எடுத்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து அனைவரையும் கைது செய்யக்கோருதல்

3. குற்றவாளிக்கு உடந்தையாக செயல்பட்ட கை.களத்தூர் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் பெண் காவலர் உள்ளிட்ட காவலர்கள் மீது நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்து போக்ஷோ சட்டத்தில் கைது செய்யக்கோருதல்.

அய்யா,

வணக்கம், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், நூத்தப்பூர் கிராமத்தில் , விஜயபுரம் கிழக்கு, காட்டு கொட்டகையில் வசிக்கும் ராஜேந்திரன், பாக்கியம் ஆகியோர் மகள் 17 வயதுடைய ராஜேஸ்வரி 10 வகுப்பிலும், 12–ம்

வகுப்பிலும் பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர் இவர் B.Sc., நர்சிங் கல்லூரியில் சேருவதற்கு கவுன்சிலிங்கிற்காக காத்து இருந்தார் ~~இருந்தார்~~.

இவர் 31.08.2022 அன்று இரவு பாத்ரூம் போவதற்கு வெளியே வந்த போது பக்கத்து வீட்டை சேர்ந்த 1) மணி த/பெ. ராமசாமி , 2) ராமசாமி த/பெ. சோலைகவுண்டர் 3) ராணி க/பெ. ராமசாமி ஆகியோர் மயக்கத்திற்கு மருந்து அடித்து ஒரு ஆட்டோவில் கடத்தி சென்றனர். ஆட்டோவில் இருவர் இருந்தனர்.

மாணவி ராஜேஸ்வரி மயக்கத்தில் இருந்த போதே மணி என்பவர் கட்டாய திருமணம் செய்து பாலியல் வல்லுறவு செய்து ஆபாசமாக போட்டோ எடுத்துள்ளார். அப்போது 1) சாந்தி, 2) சத்யா, 3) சத்யாவின் கணவர் , 4) மாரிமுத்து ஆகியோர் உடன் இருந்துள்ளார்கள்.

மாணவி ராஜேஸ்வரி கடந்தப்பட்ட 31.08.2022 அன்று இரவே அவரது அப்பா ராஜேந்திரன் கை.களத்தூர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். ஆனால் பணியில் இருந்த காவலர்கள் மறுநாள் வரசொல்லி அனுப்பி விட்டனர். 01.09.2022 அன்று காலை மாணவியின் அப்பா ராஜேந்திரன் கை.களத்தூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் தன் மகள் மேற்கண்ட நபர்களால் கடத்தப்பட்டதாக வாக்குமூலம் அளித்தார். அதை உதவி ஆய்வாளர் எழுத்து மூலமாக பதிவு செய்து கையெழுத்து பெற்று கொண்டதுடன் குற்றவாளி மணியின் செல்நெம்பரை பெற்று போன் செய்கிறார். மணி மாணவி ராஜேஸ்வரியை திருமணம் செய்து கொண்டதாக கூறினார். அதற்கு SI பெண்ணை கொண்டு வந்து விட்டு , விட்டு ஓடி விடு என்று கூறிவிட்டு மாணவியின் தந்தையிடம் நாளை வா என்று கூறி அனுப்பி விடுகிறார். ஆனால் அன்று மாலையே மாணவியின் அப்பா ராஜேந்திரனை கூப்பிட்டு காலையில் எழுதி வாங்கியது அடித்தல் திருத்தமாக உள்ளது. எனவே நான் எழுதி வைத்துள்ளதில் கையெழுத்து போடு என்று கையெழுத்து பெற்றுக்கொண்டுள்ளார். 03.09.2022 அன்று குற்றவாளிகள் மாணவி ராஜேஸ்வரியை மிரட்டி சமயபுரம் சென்றாக

சொல்லிக்கொள்ள காவல் துறையும் அதே போல் எழுதி வாங்கி கொண்டு குற்ற வாளிகளை அனுப்பி விட்டனர். மாணவியின் அப்பா நான் கொடுத்த புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கேட்டபோது உன் மகள் காணவில்லை என்று தானே சொன்னாய் உன் மகள் வந்து விட்டார். அழைத்து செல்லுங்கள் என்று அனுப்பி விட்டனர். மீண்டும் அந்த மாணவிக்கு தொடர்ந்து மிரட்டல் இருந்து வந்துள்ளது. தீபாவளிக்கு அடுத்த நாள் 25.10.2022 அன்று வீட்டில் அருகே ஓடையில் துணி துவைத்துக்கொண்டு இருந்த மாணவியை கொலை மிரட்டல் விடுத்து ஆபாசமாக எடுத்த படத்தை வெளியிட்டு விடுவேன் என்று மிரட்டியதால் அந்த மாணவி களைக்கொல்லி மருந்தை குடித்து விட்டார். அவரை வீரகனூர் தனியார் மருத்துவமனையில் சேர்ந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தனர். கை கை.களத்தூர் காவல் துறை சாதாரணபிரிவுகளில் மட்டுமே வழக்கு பதிவு செய்துள்ளனர். சேலம் மருத்துவமனை சென்ற பெண் காவலர் உன் மகள் பல்லிளிக்காமல் அவள் அழைத்து சென்றனா? இன்றோடோ விட்டு விடு வெளியே சொன்னால் உங்களுக்கு தான் வெக்கம் என்று பேசியுள்ளார். 31.10.2022 அன்று மாணவியின் அப்பா சேலம் மாவட்ட ஆட்சியரிடம், மாணவியின் அண்ணன் செந்தில்குமார், பாட்டி முத்தம்மாள் ஆகியோர் மாணவியின்அப்பா பெயரில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரிடமும் குற்ற வாளிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு அளித்துள்ளனர். எந்தவித நடவடிக்கையும் இல்லை. இந்நிலையில் சிகிச்சை பலன்இன்றி மாணவி ராஜேஸ்வரி 16.11.2022 அன்று மரணம் அடைந்தார்.

எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்

1. மாணவி ராஜேஸ்வரின் மரணத்திற்கு காரணமான அனைவர் மீதும் போக்சோ ஆட்கடத்தல், கட்டாய திருமணம் , பாலியல், வல்லுறவு, கொலை மிரட்டல், தற்கொலைக்கு தூண்டுதல், பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து அனைவரையும் கைது செய்ய வேண்டும்.

2. மாணவி கடத்தப்பட்ட 31.08.2022 அன்று மாணவியின் அப்பா அளித்த புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து இருந்தால் மாணவியை கட்டாய திருமணம் மற்றும் பாலியல் வன்கொடுமை, ஆபாசா போட்டோ எடுத்ததில் இருந்து தடுத்து இருக்க முடியும்.

03.09.2022 குற்றவாளிகள் மாணவியை ஒப்படைத்த போது நடவடிக்கை எடுத்து இருந்தால் தொடர் மிரட்டல், மாணவியின் மரணம் தடுத்து இருக்கலாம்.

மாணவி மருந்து குடித்துவுடன் மாணவியின் மைனர் ஏற்று தெரிந்தும் போக்ஷோ கட்டத்தில் வழக்கு பதியாமல் சாதாரண பிரிவுகளில் வழக்கு செய்தது. மாணவியின். நடத்தை குறித்து பெண் காவலர் பேசியது உள்ளீட்ட செயல்கள் ஆரம்பம் முதலே குற்றவாலிக்கு ஆதரவாகவே கை.களத்தூர் காவல்துறை செயல்பட்டு உள்ளது. எனவே சம்மந்தப்பட்ட காவ்ல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து போக்ஷோ சட்டப்பிரிவுகளின்கீழ் கைது செய்ய வேண்டும்.

3. மாணவியின் குடும்பத்திற்கு அரசு உரிய இழப்பீடும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கவேண்டும்.

4. உரிய நீதி விசாரணைக்கு உத்தரவிடவேண்டும்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

(பெ. ரமேஷ்)

**மாவட்டச் செயலாளர்**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்)**
**பெரம்பலூர் மாவட்டம்.**